தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-8-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையில் இரத்ததான முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் இரத்ததான முகாம் 9-8-2014 அன்று காலை 10 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமை முனைவர். ச. மகிமைராஜா முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் தொடங்கி வைத்தார். கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கியின் பொறுப்பாளர் மருத்துவர் கே. பழநியப்பன், தலைமையில் மருத்துவ மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள், மருத்துவக்குழுவினர், இம்முகாமை நடத்தினர். இந்த முகாமில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் நாற்பது பேர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

இந்த முகாமில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவர்கள் டாக்டர் அ. அருள்மொழி, டாக்டர் பி.எஸ். இரமேஷ் பாபு, உள்ளிட்டமருத்துவக் குழவினர் பங்கேற்றனர்.

இந்த முகாமிற்கான விரிவான ஏற்பாடுகளை பல்கலைக்கழக நாட்டுநலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா, தலைமையில் நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் மு. ரா. லதா, முனைவர் ஹேமாபிரபா, முனைவர் இரா. பாவேந்தன், முனைவர் ஜி. குரு, முனைவர் வள்ளியம்மை, முனைவர் எஸ். வரதராஜ் ஆகியோர் மேற்கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்